# நியாகம பிரதேச சபை

## காலி மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 01 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 செப்டம்பர் 29 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

---------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நியாகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---------------------------------------------------------------

1.3.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

-----------------------------------------

சபையினால் கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாக கிடைத்திருந்த போடோன் வீல்ட் டிரக்டரின் பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) பொதுச் சந்தை நிர்மாணிப்பதற்காக முன்னைய ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,834,516 இற்கான செலவுகளை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(இ) முன்னைய ஆண்டின் போது நூலகத்திற்கு நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 5,210 இற்கான புத்தகங்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. அத்துடன் அகற்றப்பட்ட ரூபா 14,219 இற்கான புத்தகங்கள் நிதிக் கூற்றுக்களில் இருந்து அகற்றியிருக்கவில்லை.

(ஈ) பிரதான பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்பட்டோர் மீதி ரூபா 15,136,403 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை

ரூபா 22,461,680 என காட்டப்பட்டிருந்தமையால் கடன்பட்டோர் ரூபா 7,325,277 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(உ) ரூபா 9,872 இற்கான பதவியணிக் கடன் வட்டி பெறுவனவு நிதிக் கூற்றுக்களில் வருமானம் எனக் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டிற்கான சம்பளம் மற்றும் ஊதியச் செலவுகள் ரூபா 4,731,627 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 4,722,136 என காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான செலவு ரூபா 9,491 இனால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(எ) மீளாய்வாண்டிற்கான பொதுவான நிருவாக வழங்கல்கள் மற்றும் உபகரணச் செலவு ரூபா 1,652,891 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் ரூபா 1,604,036 என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 48,855 இனால் குறிப்பிட்ட செலவு குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) வருமானத்திற்கான ஏனைய துணைச் சேவை வழங்கல்கள் மற்றும் உபகரணச் செலவு ரூபா 508,202 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் ரூபா 581,212 தொகை எனக் காட்டப்பட்டுள்ளமையால் ரூபா 73,010 இனால் குறிப்பிட்ட செலவு மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஐ) மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,885,540 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 1,875,450 எனக் காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 1,010,090 இனால் முத்திரைக் கட்டண வருமானம் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஒ) மீளாய்வாண்டிற்காக நீதி மன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 2,032,466 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 1,863,133 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 169,333 இனால் வருமானம் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-----------------------------------------------------------------------------------------

(அ) 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகள் மற்றும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 9,800 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

(ஆ) 05 கணக்கு விடயங்கள் தொடர்புடைய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 312,802 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 109,420,427 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக காணி உறுதிகள் மற்றும் நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள், முறைப்படி பேணப்பட்ட கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் பதிவேடு மற்றும் காலப்பகுப்பாய்வு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கு இணங்காமை

------------------------------------------------------------------------------------------

(அ) பிரதேச சபை நிதியத்தினை பயன்படுத்துவது பற்றிய சட்ட ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 132 இல் காட்டப்பட்டுள்ள விடயங்களின் கீழ் காணப்படாத கருமம் ஒன்றான 03 வெளிநாட்டு கல்விச் சுற்றுலாவிற்காக தலைவர் மற்றும் உறுப்பினர்கள் 07 பேருக்கு ரூபா 891,634 தொகையொன்று சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டுள்ளது. அதே போல் வெளிநாடு செல்வதற்காக முறையான அங்கீகாரம் ஒன்றினையும் பெற்றிருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 219 இன் பிரகாரம் ஏதேனும் ஒரு பிரதேச சபையின் மந்திரி ஒருவருக்கு அல்லது ஊழியர் ஒருவருக்கு பிரதேச சபையுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த அல்லது செயற்படுத்தப்படும் ஏதேனும் உடன்படிக்கை ஒன்றின் அல்லது வேலை ஒன்றின் தொடர்பாக அல்லது நிதி தொடர்பாக நேரடியாகவோ அல்லது வேறு விதமாக இருக்கக் கூடாது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், நியாகம பிரதேச சபையின் மந்திரி ஒருவர் பிரதேச சபையுடன் நேரடியாகவே உடன்படிக்கைகளுக்கு மேற்கொண்டிருந்தார்

2. நிதி மீளாய்வு

-----------------------

2.1 நிதி விளைவு

-----------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 1,299,322 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 832,556 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 வீத வரி

-------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 335,939 இற்கான வீத வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 ஏக்கர் வரி

----------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 81,508 இற்கான ஏக்கர் வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 குத்தகை

--------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 113,305 இற்கான குத்தகை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.4 கடைகள் வாடகைக்கு கொடுத்தல்

--------------------------------------------------------

14 கடைகளைக் கொண்ட தல்கஸ்வல கல்லிந்த இரண்டு மாடி வர்த்தக தொடர் கட்டிட பொருளாதார நிலையம் நியாகம பிரதேச செயலாளரினால் 2009 ஆண்டின் போது சபைக்குச் சாட்டப்பட்டிருந்த போதிலும் அக் கடைகள் கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஆகஸ்ட் 13 வரை வாடகைக்கு கொடுத்திருக்கவில்லை. அதே போல் கடைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட இடப் பரிசோதனையின் போது 14 கடைகளுடம் மூடப்பட்ட நிலையில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் சபைக்கு கிடைக்கவிருந்த வருமானத்தை 06 வருடங்களாக இழந்துள்ளது.

2.2.5 அனுமதிப் பத்திரக் கட்டணம்

-----------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது பிரதேச சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 100,817 இற்கான ஏக்கர் வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 152(4) இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.6 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 871,000 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 4,831,584 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

2.3 மிகை விதிப்பு

-------------------------

1987 இன் 15 இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்கள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 176,854 தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 முகாமைத்துவத் திறமையின்மை

-----------------------------------------------------

1988 இன் 74 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1975 இன் 01 இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தின் தேவையின் பிரகாரம் 06 அங்கத்தவர்களினால் மீளாய்வாண்டிற்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று 2015 ஆகஸ்ட் 14 திகதி வரையும் வழங்கியிருக்கவில்லை.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

-------------------------------------------------

சபையில் கடமையாற்றிய இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மற்றும் ஓய்வு பெற்றுள்ள 05 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 16,901 இற்கான கடன் மீதி ஒன்று 2006 ஆண்டிற்கு முன்னர் முதல் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்டது.

3.3 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

------------------------------------------------------

பயன்படுத்தப்படாமல் அழிவு நிலையில் காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் பொறியும் பொறித் தொகுதியும் அகற்றுதல் பற்றி ஜனாதிபதிச் செயலாளரினால் 2013 ஜூன் 05 திகதிய இலக்கம் : PCMD/PR/2013 கொண்ட சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச நிறுவனங்களில் பயன்படுத்தப்படாத அழிவடையும் நிலையில் காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் பொறியும் பொறித் தொகுதியும் 2013 செப்டம்பர் 05 திகதி அளவில் அகற்றுவதற்கான செயற்திட்டம் ஒன்றினை தயாரிக்கும் படி அறிவித்திருந்த போதிலும், சபைக்குச் சொந்தமான டிரக்டர் ஒன்று டேலர் ஒன்று மற்றும் கப் வண்டி ஒன்று துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது என 2015 ஆகஸ்ட் 28 திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

3.4 முறை சாராக் கொடுக்கல் வாங்கல்கள்

----------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படகின்றன.

(அ) கைக் காசுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்ளல்

-----------------------------------------------------------------

தலைவரினால் பயன்படுத்தப்பட்ட கப் வண்டிக்கான எரிபொருள் கட்டளைகள் மூலம் எரிபொருள் பெற்றுக்கொள்ளாமல் 2014 ஆண்டின் போது எரிபொருள் 3834 லீற்றர்கள் கைக் காசுக்கு பெறப்பட்டு சீட்டைகள் சமர்ப்பிக்கப்பட்டு ரூபா 460,087 தொகை சபை நிதியத்தில் இருந்து மீளளிப்பு செய்யப்பட்டுள்ளது.

சபைக்குச் சொந்தமான வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்தப் பொழிப்பு என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) எரிபொருள் வழங்கும் அடிப்படையில் வாகனம் ஒன்று பெற்றுக்கொள்ளல்

------------------------------------------------------------------------------------------------------------------------

தனிப்பட்ட சாரார் ஒருவருடன் வாகன ஒன்றிற்கு சபையினால் எரிபொருள் வழங்கும் அடிப்படையில் பெற்றுக்கொண்டு 2014 ஜூன் 14 திகதி முதல் செப்டம்பர் 08 திகதி வரையான காலப் பகுதியில் தலைவரினால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அக் காலப் பகுதியில் எரிபொருள் 1150 லீற்றர்கள் வாகனத்திற்கு பயன்படுத்தியதற்காக சபை நிதியத்தில் இருந்து ரூபா 185,880 செலவிடப்பட்டிருந்தது.

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) சபையின் நடவடிக்கைகளுக்காக மேற் குறிப்பிட்டவாறு தனியார் வாகனம் பெற்றுக்கொள்வதற்கான காரணம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை.

(ii) இந்த வாகனத்திற்கான எரிபொருள் பெற்றுக்கொள்ளும் போது எரிபொருள் கட்டளைகள் பயன்படுத்தப்படவில்லை. அத்துடன் தலைவரினால்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த பில் பத்திரங்கள் மீது குறிப்பிட்ட பணம் அவருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அதே போல் குறிப்பிட்ட காலப் பகுதியில் வாகனத்திற்கு பயன்படுத்தப்பட்ட எரிபொருள் 1150 தொடர்பாக ஓட்டப்பட்டதை உறுதிப்படுத்துவதற்காக ஓட்ட அட்டவணை எழுதப்பட்டிருக்கவில்லை.

3.5 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

-----------------------------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள பிடிகல மஹவத்த என்ற காணியில் 1½ ஏக்கர் அளவான பகுதி ஒன்று 2006 ஆண்டு முதல் குப்பைகள் குவிப்பதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. பிலிஸரு செயற்திட்டத்தின் மூலம் 2007 ஆண்டு முதல் 2012 வரை ரூபா 5,098,338 தொகையொன்று செலவிடப்பட்டு சேதனப் பசளைத் தளம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் ஒரு நாளைக்கு 3.5 தொன்கள் குப்பை சேகரிக்கப்பட்டு அதன் மூலம் ஒரு நாளைக்கு 200 கி.கி. சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என வெளிப்படுத்தப்பட்டது. கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஆகஸ்ட் 24 திகதி வரை காணிக்கு குப்பை கொண்டு வருதல் நிறுத்தப்பட்டிருந்ததுடன் சேதனப் பசளை உற்பத்தி 2015 ஜூன் 19 திகதி முதல் நிறுத்தப்பட்டிருந்தது. அதே போல் மேலதிக கிரயம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு கழுத்தறை மாவட்டத்தில் வலல்லாவிட்ட பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் குப்பைகள் குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

-------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------------

பாதீட்டில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானத்திடையே கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்